www.surabooks.com

9-ஆம் வகுப்பு
பொதுத்தமிழ்

இயல் - 1 : மொழி

தமிழ்விடு தூது
தமிழோவியம்
ஆறாம் திணை
எழுத்து - அளபெடை

இயல் - 2 : இயற்கை, சுற்றுச் சூழல்

நீரின்றி அமையாது உலகு
பெரியபுராணம்
பட்டமரம்
புறநானூறு
தண்ணீர்
பகுபத உறுப்பிலக்கணம்

இயல் - 3 : பண்பாடு, மனிதம்

ஏறுதழுவுதல்
மணிமேகலை
மார்கழி பெருவிழா
தாய்மைக்கு வறட்சி இல்லை!
தொடர் இலக்கணம், ஆகுபெயர்
திருக்குறள்

இயல் - 4 : கல்வி

கல்வியில் சிறந்த பெண்கள்
குடும்ப விளக்கு
உயிர்வகை
வீட்டிற்கோர் புத்தகசாலை
துணைவினைகள்

இயல் - 5 : கலை, அழகியல், புதுமை

சிற்பக்கலை
இராவண காவியம்
செய்தி
வல்லினம் மிகும் இடங்கள்
திருக்குறள்

இயல் - 6 : நாடு, சமூகம், அரசு, நிருவாகம்

இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு
சீவகசிந்தாமணி
விண்ணையும் சாடுவோம்
வல்லினம் மிகா இடங்கள்

இயல் - 7 : அறம், தத்துவம், சிந்தனை

பெரியாரின் சிந்தனைகள்
ஒ என் சமகாலத் தோழர்களே!
யசோதர காவியம்
மகனுக்கு எழுதிய கடிதம்
யாப்பிலக்கணம்
திருக்குறள்

www.surabooks.com

இயல் 1

மொழி

செய்யுள்

தமிழ்விடு தூது

நூற்குறிப்பு

தமிழ் சிற்றிலக்கிய வகைகளுள் '**தூது**' ஒன்றாகும்.

வேறுபெயர்கள் : வாயில் இலக்கியம், சந்து இலக்கியம்

பாவகை : கலிவெண்பா

மையக்கருத்து : தலைவன் தலைவியருள் ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக, மாலையை வாங்கிவருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாக பத்தையும் தூது விடுவதாக இயற்றப்படும்.

தமிழ்விடுதூது, மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.

இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் **அறியப்படவில்லை.**

இந்நூலை 1930–இல் **உ.வே.சாமிநாதர்** அவர்கள் முதன் முதலில் பதிப்பித்தார்.

கண்ணி

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதே போல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை **கண்ணி** ஆகும்.

பாடல்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

பாடலின் பொருளுரை

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான முத்தி ஆகிய விடுதலை தரும் **இயல், இசை, நாடகம்** என மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் **தமிழே!** அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக.

தமிழே ! உன்னிடமிருந்து **குறவஞ்சி, பள்ளு** என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். பிறர் படிக்கும் வகையில் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய். அப்படிப்பட்ட உன்னிடம் **தாழிசை, துறை, விருத்தம்** என்னும் மூவகைப் பாவினங்களும் இருக்க வேண்டுமே!

பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே **சிந்தா** (கெடாத) **மணியாய்** இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) **சிந்து** என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ ?

சொல்லும் பொருளும்

குறம், பள்ளு	– சிற்றிலக்கிய வகைகள்
மூன்றினம்	– துறை, தாழிசை, விருத்தம்
திறமெல்லாம்	– சிறப்பெல்லாம்
சிந்தாமணி	– சீவகசிந்தாமணி, சிதறாத மணி
சிந்து	– ஒருவகை இசைப்பாடல்

இலக்கணக்குறிப்பு

முத்திக்கனி	உருவகம்
தெள்ளமுது	பண்புத்தொகை
சிந்தாமணி	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

கொள்வார் – கொள் + வ் + ஆர்

கொள் – பகுதி

வ் – எதிர்கால இடைநிலை

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப் போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"

– கவியோகி சுத்தானந்த பாரதியார்.

உரைநடை

திராவிட மொழிக்குடும்பம்

மொழியின் தோற்றம்

தொடக்க காலத்தில் மனிதர் தமக்குத் தோன்றிய எண்ணங்களை **மெய்ப்பாடுகள், சைகைகள், குரல் ஒலிகள், ஓவியங்கள்** மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர். இவற்றின் மூலம் பருப்பொருள்களை மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. நுண்பொருள்களை உணர்த்த இயலவில்லை. அதனால் பேச்சொலிகளை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி, காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று, மொழியாக வளர்ந்தது.

மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும் இயற்கை அமைப்பும் மொழிகள் பல உருவாகக் காரணங்களாக அமைந்தன. உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் **பிறப்பு, அமைப்பு, உறவு, தொடர்பு** ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உலக மொழிகள் **ஒப்புமை நோக்கில்** குடும்பங்களாகப் பகுக்கப்படுகின்றன.

மொழிகளின் காட்சிச் சாலை

இந்தியாவில் பேசப்படும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மொழிகளை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.

1. **இந்தோ – ஆசிய மொழிகள்**
2. **திராவிட மொழிகள்**
3. **ஆஸ்திரோ – ஆசிய மொழிகள்**
4. **சீன – திபெத்திய மொழிகள்**

இவை மட்டுமின்றி பல கிளைமொழிகளும் இந்தியாவில் பேசப்படுகின்றன. இதனால், **இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது.** என்று **ச. அகத்தியலிங்கம்** குறிப்பிடுகிறார்.

மொகஞ்சதாரோ – ஹரப்பா அகழாய்வுக்குப் பின், உலகின் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று **சுனிதி குமார், ஐராவதம் மகாதேவன்** முதலான அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிடம் எனப்படுகிறது. **திராவிடம்** என்ற சொல்லை முதன் முதலில் குறிப்பிட்டவர். **குமரிலபட்டர்** ஆவார். தமிழ் என்னும் சொல்லில் இருந்துதான் **திராவிடா** என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். **ஹீராஸ் பாதிரியார்,**

www.surabooks.com

தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா

என்று மாற்றம் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மொழி ஆய்வு

திராவிட மொழிக்குடும்பம் என்னும் பகுப்பு உருவானதற்கு ஒரு வரலாறு உள்ளது. தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவி வந்தது. இம்மொழிகளில் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும், அதிலிருந்தே மற்ற மொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர்கள் கருதினர்..

அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் வடமொழியை ஆராய்ந்து, அம்மொழி மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என முதன்முதலில் குறிப்பிட்டார். தொடர்ந்து 1816 ஆம் ஆண்டு **பாப், ராஸ்க், கிரிம்** முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முதன் முதலில் **பிரான்சிஸ் எல்லிஸ்** என்பவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து, இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரேயினமாகக் கருதித் **தென்னிந்திய மொழிகள்** எனவும் பெயரிட்டார். இதனையொட்டி, **மால்தோ , தோடா, கோண்டி** முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

1856 இல் **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்னும் நூலில் **கால்டுவெல்**, திராவிட மொழிகள் ஆரிய மொழிக் குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும், இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார். இதனை மேலும் உறுதிப்படுத்த பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார்.

கால்டுவெல்லுக்குப் பின்னர், கே.வி.சுப்பையா, எல்.வி. இராமசுவாமி, பரோ, எமினோ , கமில் சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சிசுந்தரம், வி.எச். கிருஷ்ணமூர்த்தி முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆராய்ந்து பெரும் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

திராவிட மொழிக்குடும்பம்

திராவிட மொழிக்குடும்பம் மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தென்திராவிடம்	நடுத்திராவிடம்	வடதிராவிடம்
தமிழ்	தெலுங்கு	குரூக்
மலையாளம்	கூயி	மால்தோ
கன்னடம்	கூவி (குவி)	பிராகுய் (பிராகுயி)
குடகு (கொடகு)	கோண்டா	
துளு	கோலாமி (கொலாமி)	
கோத்தா	நாய்க்கி	
தோடா	பெங்கோ	
கொரகா	முண்டா	
இருளா	பர்ஜி	
	கதபா	
	கோண்டி	
	கோயா	

மேற்கண்ட 24 மொழிகளுடன் அண்மையில் கண்டறியப்பட்ட **எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா** ஆகிய மொழிகளையும் சேர்த்து திராவிட மொழிகள் மொத்தம் **28** ஆகும்.

> தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக் குடும்பத்திற்கு உரிய மொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி. தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்.
>
> **– கால்டுவெல்**

திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள்

சொற்களின் இன்றியமையாத பகுதி வேர்ச்சொல் அல்லது அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான வேர்ச்சொற்களைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள்

திராவிட மொழிகள் பொதுவான **அடிச்சொற்களைக்** கொண்டிருக்கின்றன.

அடிச்சொல்	திராவிட மொழிகள்
கண்	தமிழ்
கண்ணு	மலையாளம், கன்னடம்
கன்னு	தெலுங்கு, குடகு
ஃகன்	குரூக்
கெண்	பர்ஜி
கொண்	தோடா

திராவிட மொழிகளின் **எண்ணுப் பெயர்கள்** ஒன்று போலவே அமைந்துள்ளன.

எண்ணுப் பெயர்கள்	திராவிட மொழிகள்
மூன்று	தமிழ்
மூணு	மலையாளம்
மூடு	தெலுங்கு
மூரு	கன்னடம்
மூஜி	துளு

குறில் நெடில் வேறுபாடு

திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

(எ.கா.) அடி – குறில், ஆடி – நெடில் ; இடு – குறில், ஈடு – நெடில்

பால் பாகுபாடு

திராவிட மொழிகளில் **பொருள்களின் தன்மையை ஒட்டிப்** பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வட மொழியில் இவ்வாறு அமையவில்லை. உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும் கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. வடமொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன.

ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காண முடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய் – ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் – பொதுப்பால் எனப் பகுக்கப்படுகின்றன.

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கென பால் காட்டும் விகுதிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.

(எ.கா.) கடுவன் – ஆண்குரங்கு, மந்தி – பெண்குரங்கு
களிறு – ஆண் யானை, பிடி – பெண் யானை

உயர்திணையில் ஆண்பால், பெண்பால் பகுப்புக்கு மாறாகத் திராவிட மொழிகளில் **மலையாள மொழி** மட்டுமே அமைந்துள்ளது.

enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com

அம்மொழியில் **திணை, பால், எண்** ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்துகொள்ள முடியும்.

வினைமுற்று வடிவங்கள்

ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொல் காலத்தை மட்டுமே தவிர திணை, பால், எண், இடம் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. ஆனால் திராவிட மொழிகளின் வினைமுற்று வடிவங்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

(எ.கா.) வந்தான் – இதன் விகுதியான **ஆன்** உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை ஆகும்.

பறந்தது – இதன் விகுதியான **அது** அஃறிணை படர்க்கை ஒருமை ஆகும்.

தமிழின் தனித்தன்மைகள்

1. தொன்மையும் தனித்தன்மை வாய்ந்த இலக்கண இலக்கிய வளமும் உடையது.
2. இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித் தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயனா, மடகாஸ்கர், ட்ரினிடாட் , ஆஸ்திரேலியா, கனடா போன்ற உலக நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்.
3. திராவிட மொழிகளுள் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.
4. தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.
5. ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.
6. இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.
7. தமிழின் பல வேர்ச்சொற்களின் ஒலியன்கள் (அடிப்படை ஒலிகள்), ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி, பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.
8. தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் விளங்கி வருவதால், பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாகத் தமிழ்மொழி அமைகிறது.
9. மூலத் திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும், தமிழ்மொழி பேணிப் பாதுகாத்து வருகிறது.

திராவிட மொழிகளின் பழைமையான இலக்கிய இலக்கணங்கள்

மொழி	இலக்கியம்	காலம்	இலக்கணம்	காலம்	ஆதாரம்
தமிழ்	சங்க இலக்கியம்	கி.மு. 5 முதல் கி.பி. 2–ஆம் நூற்றாண்டு வரை	தொல்காப்பியம்	கி.மு. 3–ஆம் நூற்றாண்டு அளவில்	தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ) சாகித்திய அகாதெமி
கன்னடம்	கவிராஜ மார்க்கம்	கி.பி. 9–ஆம் நூற்றாண்டு	கவிராஜ மார்க்கம்	கி.பி. 9–ஆம் நூற்றாண்டு	இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் (செ.வை. சண்முகம்)
தெலுங்கு	பாரதம்	கி.பி. 11–ஆம் நூற்றாண்டு	ஆந்திர பாஷா பூஷணம்	கி.பி. 12–ஆம் நூற்றாண்டு	
மலையாளம்	ராமசரிதம்	கி.பி. 12–ஆம் நூற்றாண்டு	லீலா திலகம்	கி.பி. 15–ஆம் நூற்றாண்டு	மலையாள இலக்கிய வரலாறு (சாகித்திய அகாதெமி)

திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை

தமிழ்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்	துளு	கூர்க்
மரம்	மரம்	மானு	மரம்	மர	மர
ஒன்று	ஒண்ணு	ஒகடி	ஒந்து	ஒஞ்சி	–
நூறு	நூறு	நூரு	நூரு	நூது	–
நீ	நீ	நீவு	நீன்	ஈ	நின்
இரண்டு	ஈர்ரெண்டு	ஈர்ரெண்டு	எரடு	ரட்டு	–
நான்கு	நால், நாங்கு	நாலுகு	நாலு	நாலு	–
ஐந்து	அஞ்சு	ஐது	ஐது	ஐனு	–

– டாக்டர் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் : இலங்கை, சிங்கப்பூர்.

மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பணத்தாளில் தமிழ்மொழி இடம் பெற்றுள்ளது.

செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள்

1. தொன்மை
2. பிறமொழித் தாக்கமின்மை
3. தூய்மை
4. தனித்தன்மை
5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு
6. பொதுமைப் பண்பு
7. நடுவுநிலைமை
8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு
9. உயர் சிந்தனை
10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
11. மொழிக் கோட்பாடு

உயர்தனிச் செம்மொழியாக ஒளிரும் தமிழ்

உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழுக்கு ஈடில்லாத ஒரு தனித்தன்மையுண்டு. ஈராயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்த செவ்விய

enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com

இலக்கியங்களின் களஞ்சியமாகவும், மூத்த திராவிட இலக்கிய அணிகலன்களின் கவசமாகவும் தமிழ்மொழி திகழ்கிறது. எண்ணற்ற கவிதைகள், செய்யுள்கள், பாடல்களின் கோவைகளைக் கொண்ட இம்மொழி கிறித்துவின் முதலாண்டுக்கு முன்னேயே நிலைபெற்றதாகும். தங்குதடையின்றிப் பொங்கும் வளமையுடனும் பொலிவார்ந்து ஓங்கிய வளர்க்கியுடனும் நூற்றாண்டுகள் பல கடந்தாலும் இன்றும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் தமிழ்மொழி சிறந்து விளங்குகிறது.

தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் ஆறு கோடித் தமிழரின் அன்றாட வாழ்வில், நடனமிடும் தமிழ்மொழி : இலங்கையிலும் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, மியான்மர் நாடுகளிலும் மோரீசு, டிரினிடாட், பிஜித் தீவுகளிலும் வாழும் மக்களால் பேசவும் எழுதவும் படுகிறது. இலங்கை அரசும் சிங்கப்பூர் அரசும் தமிழ்மொழியினை ஆட்சி மொழியாகவும் அறிவித்துள்ளன.

தமிழ்மொழியையும், தமிழின் இலக்கியப் படைப்புகளில் பொதிந்துள்ள கோட்பாடுகளையும் இலக்கண விதிகளையும் நுணுக்கமாக வரையறுக்கும் வகைப்பாடு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொடங்கியுள்ளது. இதனால் இலக்கியச் செய்யுள் படைப்புகள் செம்மையாக அமைவதற்குத் தொல்காப்பியம் வளமூட்டியுள்ளது. தொல்காப்பியத்தில் காணப்படும் விதிகள், நெறிமுறைகள், ஒலியியல், மொழியியல் பயன்பாடுகள், அயற்சொற்களைக் கையாள்வதற்கு உருவாக்கிய விதிப்பாடுகள் முதலியன தெளிவாக உள்ளன. இதனால் தமிழ்மொழி பயனுடைய மேம்பாட்டைப் பெறுவதற்கு இடந்தருகிறது என்று குறிப்பிட்டுள்ளனர். பழைமை வாய்ந்த, செப்பமுற வளர்ந்த தமிழ்மொழியை இப்போது செம்மொழி என்று நாம் குறிப்பிடும் சிந்தனைக்கு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இம்மண்ணில் வாழ்ந்த அறிஞர்கள் உரமூட்டியுள்ளனர்.

கிரேக்க மொழியுடன் தமிழ்மொழியாளரின் உறவு தொடங்குவதற்கு முன்னரே, தமிழ்மொழி செம்மொழித் தகுதியை அடைந்துவிட்டது என்று **கில்பர்ட் சிலேட்டர்** குறிப்பிடுகிறார். தமிழ்மொழி கிரேக்க மொழியை விடச் செறிவானதென்றும், இலத்தீன் மொழியை விட மேன்மையானது என்றும், ஆங்கிலம் மற்றும் செருமன் மொழியை விட ஆற்றல் வாய்ந்தது என்றும் **டாக்டர் வின்சுலோ** குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்சு இந்தியவியல் அறிஞர் **பியரி மெய்லியின்** கருத்துப்படி, செம்மொழித் தமிழின் சங்கப் பாடல்கள், கிரேக்க மொழியின் நுட்பமான கவிதைத் தொகுதிகளுக்கு அறைகூவலாக விளங்குகின்றன.

– உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுத் தகவல் கையேடு, 2010

செய்யுள்

தமிழோவியம்
- ஈரோடு தமிழன்பன்

ஆசிரியர் குறிப்பு

இயற்பெயர் – ஜெகதீசன். இவர் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் பல படைப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ, சென்றியு, லிமரைக்கூ எனப் புதுபுது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.

இவரது **'வணக்கம் வள்ளுவ!'** என்னும் கவிதை நூலுக்கு 2004 – ஆம் ஆண்டுக்கான **சாகித்ய அகாதெமி** விருது வழங்கப்பட்டது. **'தமிழன்பன் கவிதைகள்'** தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும்.

இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஈரோடு தமிழன்பன் எழுதிய **தமிழோவியம்** என்ற கவிதை பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இக்கவிதை குறித்து கவிஞர் தனது முன்னுரையில் **"ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!"** என்று குறிப்பிட்டுள்ளார்.

பாடல்

காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே ! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே !

அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள் !

ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்
மட்டுமே போதுமே ஓதி, நட.....

எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே.....

விரலை மடக்கியவன் இசையில்லை - எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!

– ஈரோடு தமிழன்பன்

இலக்கணக்குறிப்பு

எத்தனை எத்தனை, விட்டு விட்டு	அடுக்குத்தொடர்கள்
ஏந்தி	வினையெச்சம்
காலமும்	முற்றும்மை

பகுபத உறுப்பிலக்கணம்

வளர்ப்பாய் – வளர் + ப் + ப் + ஆய்
வளர் – பகுதி,
ப் – சந்தி
ப் – எதிர்கால இடைநிலை
ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

விரிவானம்

ஆறாம் திணை
அ. முத்துலிங்கம்

ஆசிரியர் குறிப்பு

பெயர்	–	அ. முத்துலிங்கம்
ஊர்	–	யாழ்ப்பாணம் – கொக்குவில் கிராமம்
வசிக்கும் ஊர்	–	பலநாடுகளுக்குப் பயணித்துள்ள இவர் தற்போது கனடாவில் வசிக்கிறார்.
படைப்புகள்	–	அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் உள்ளிட்ட பல சிறுகதைத் தொகுப்புகள்.
விருதுகள்	–	**வம்சவிருத்தி** சிறுகதைத் தொகுப்புக்காக 1996–இல் தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றுள்ளார். **வடக்குவீதி** என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999–இல் இலங்கை அரசின் சாகித்யப் பரிசினைப் பெற்றுள்ளார்.

enquiry@surabooks.com Ph: 9840455556

10-ஆம் வகுப்பு
பொதுத்தமிழ்

இயல் - 1 : மொழி, மனிதம்

அன்னை மொழியே

பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம்

காலக்கணிதம்

புயலிலே ஒரு தோணி

சொல்

இயல் - 2 : இயற்கை, சுற்றுச்சூழல் அறிவியல்

கேட்கிறதா என் குரல்

பரிபாடல்

மேகம்

பிரும்மம்

தொகாநிலைத் தொடர்கள்

இயல் - 3 : பண்பாடு

விருந்து போற்றுதும்!

காசிக் காண்டம்

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

கோபல்லபுரத்து மக்கள்

தொகைநிலைத் தொடர்கள்

திருக்குறள்

இயல் - 4 : கல்வி

மொழிபெயர்ப்புக் கல்வி

திருவிளையாடற்புராணம்

புதிய நம்பிக்கை

இலக்கணம் - பொது

இயல் - 5 : கலை, அழகியல், புதுமை

பன்முகக் கலைஞர்

கம்பராமாயணம்

பாய்ச்சல்

அகப்பொருள் இலக்கணம்

திருக்குறள்

இயல் - 6 : நாகரிகம், நாடு, சமூகம்

சிற்றகல் ஒளி

சிலப்பதிகாரம்

முத்தொள்ளாயிரம்

மங்கையராய்ப் பிறப்பதற்கே...

புறப்பொருள் இலக்கணம்

இயல் - 7 : அறம், தத்துவம், சிந்தனை

சங்க இலக்கியத்தில் அறம்

தேம்பாவணி

அக்கறை

இராமானுசர்-நாடகம்

பா-வகை மற்றும் அலகிடுதல்

திருக்குறள்

www.surabooks.com

இயல் 1

மொழி, மனிதம்

செய்யுள்

அன்னை மொழியே

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர் குறிப்பு

துரை, இராசமாணிக்கம் என்ற இயற்பெயரைக் கொண்டவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர். இவர் **உலகியல் நூறு, பாவியக் கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள்** முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை **தமிழுக்குக் கருவூலமாய்** அமைந்துள்ளது. இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

பாடப்பகுதி : கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன.

அழகார்ந்த செந்தமிழே!

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

பாடலின் பொருளுரை : தாய்மொழியே! அழகே உருவாக அமைந்த செந்தமிழே, பழைமைக்கும் பழைமையாய் தோன்றிய இனிமையான கனியே! கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில் நிலையான ஆட்சியைத் தந்த இந்த மண்ணுலகின் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

பாடலின் பொருளுரை : பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளுடன் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

செப்பரிய நின்பெருமை

செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்

பாடலின் பொருளுரை : செழுமையான தமிழே! எமக்குள் வாழும் உயிர் போன்றவளே! பழம்பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும், வியக்கத்தக்க அளவில் நீண்ட நிலைப்புத் தன்மையும் கொண்ட உன்னை வேற்று மொழியார் புகழ்ந்துரைக்கின்றனர். இவ்விதம் சொல்ல இயலாத அளவு உள்ள உனது பெருமைகளை என்னுடைய தமிழ்நாக்கு எவ்விதம் விரிவாக எடுத்துக் கூற முடியும்?

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!

பாடலின் பொருளுரை : செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, பற்றுணர்வு பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறோம்.

சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் – க.சச்சிதானந்தன்

பிரித்தெழுதுக

செந்தமிழ்	–	செம்மை + தமிழ்
நறுங்கனி	–	நறுமை + கனி
நாட்டிடையில்	–	நாடு + இடையில்
மண்ணுலகம்	–	மண் + உலகம்
நற்கணக்கு	–	நன்மை + கணக்கு
செப்பரிய	–	செப்பு + அரிய
உணர்வெழுப்ப	–	உணர்வு + எழுப்ப
பேரரசு	–	பெருமை + அரசு
எந்தமிழ் நா	–	எம் + தமிழ் + நா

இலக்கணக்குறிப்பு

செந்தமிழ்	–	பண்புத்தொகை
நறுங்கனி	–	பண்புத்தொகை
செந்தாமரை	–	பண்புத்தொகை
பேரரசு	–	பண்புத்தொகை
முகிழ்த்த	–	பெயரெச்சம்
சிறகார்ந்த	–	பெயரெச்சம்
கன்னிக்குமரி	–	உருவகம்
மண்ணுலகம்	–	உருவகம்
தென்னன் மகள்	–	இரண்டாம் வேற்றுமைத் தொகை
நின்பெருமை	–	ஆறாம் வேற்றுமைத் தொகை
குடித்து	–	வினையெச்சம்
வாழ்த்துவமே	–	தன்மைப் பன்மை வினைமுற்று
முந்துற்றோம்	–	தன்மைப் பன்மை வினைமுற்று
யாண்டும்	–	முற்றும்மை

உரைநடை

பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம்

தேவநேயப் பாவாணர்

ஆசிரியர் குறிப்பு

மொழி ஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணர் பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தமிழ் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப்** பணியாற்றியவர். **உலகத் தமிழ் கழகத்தை** நிறுவித் தலைவராக இருந்தவர்.

பாடப்பகுதி :

தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுக் கட்டுரைகள் நூலில் உள்ள **தமிழ்ச்சொல் வளம்** என்னும் கட்டுரையின் கருத்து பாடமாகத் தரப்பட்டுள்ளது.

பாடச் சுருக்கம் :

உலகின் மூத்த மொழியாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் திகழும் தமிழ்மொழி காலத்திற்கேற்ப தன்னைத் வளர்த்துக் கொண்டே இருப்பதால், சொல்வளம் நிறைந்த, நிலைத்த மொழியாக விளங்கி வருகிறது. ஒவ்வொன்றையும் தனித்தனியான சொற்களைக் கொண்டு அழைப்பதால், சொற்பஞ்சம் இல்லாமல், தனிச்சிறப்புடன் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ் மொழியின் இத்தனிச்சிறப்பினை ஆய்வு செய்த அறிஞர்களுள் பாவாணர் குறிப்பிடத்தக்கவர்.

enquiry@surabooks.com Ph: 9840455556

நாட்டுவளமும் சொல்வளமும்

ஒரு நாட்டின் வளமும் அங்கு வழங்கும் சொற்களின் வளமும் தொடர்புடையன என்கிறார் பாவாணர். நாட்டுவளம், சொல்வளத்தை **உருவாக்குகிறது**. சொல்வளம் நாட்டுவளத்தை **உணர்த்துகிறது.** தமிழ்நாட்டில், இலையின் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தாள், ஓலை, தோகை, இலை எனப் பலவகைப் பெயர்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் ஆங்கிலமொழியில் இலையைக் குறிக்க **leaf** என்னும் ஒரு சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

விளைபொருள்களின் மிகுதியாலும் சொல்வளம் பெருகுகிறது. தமிழ்நாட்டில் ஏராளமான நெல் வகைகள் விளைவிக்கப்படுகின்றன.

(எ.கா.) செந்நெல், வெண்ணெல் , கார்நெல், சம்பா, மட்டை.

சம்பா நெல் வகையின் சில பெயர்கள் : ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா.

தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் விளையாத தானியங்கள் : வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலியவை.

அடியின் பெயர் வகை

தாவரங்களின் பெயர்	அடியின் பெயர் வகை
நெல், கேழ்வரகு	தாள்
கீரை, வாழை	தண்டு
நெட்டி, மிளகாய்ச் செடி	கோல்
கரும்பு	கழி
மூங்கில்	கழை
புளி, வேம்பு உள்ளிட்ட மரங்கள்	அடி

கிளைப்பெயர் வகை

தாவரங்களின் அடிப்பகுதியிலிருந்து கிளைத்துச் செல்லும் கிளைகளுக்குத் தனித்தனி பெயர்கள் வழங்கப்படுகின்றன.

கிளைப் பிரிவுகள்	கிளைப்பெயர் வகை
அடிமரத்திலிருந்து பிரியும் மாபெரும் கிளை	கவை
கவையில் இருந்து பிரிவது	கொம்பு (அ) கொப்பு
கொம்பில் இருந்து பிரிவது	சிறு கிளை
கிளையில் இருந்து பிரிவது	சினை
சினையில் இருந்து பிரிவது	போத்து
போத்தில் இருந்து பிரிவது	குச்சி
குச்சியில் இருந்து பிரிவது	இணுக்கு

இலைப்பெயர் வகை

ஒவ்வொரு தாவரத்தின் இலைக்கும் வேறு பெயர் இருப்பதும், காய்ந்த தாள், தோகை மற்றும் காய்ந்த இலை ஆகியவற்றிற்குக் கூட வேறு பெயர் இருப்பதும் பாவாணரால் நுட்பமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

தாவரங்களின் பெயர்கள்	இலைப்பெயர் வகை
புளி, வேம்பு	இலை
நெல், புள்	தாள்
சோளம், கரும்பு	தோகை
தென்னை, பனை	ஓலை
காய்ந்த தாள் மற்றும் காய்ந்த தோகை	சண்டு
காய்ந்த இலை	சருகு

குலைப் பெயர் வகை

காய்கள், கனிகள் ஆகியன மொத்தமாகத் தொகுதியாகக் காய்த்திருப்பதற்கும், தாவரங்களுக்கு ஏற்ப வேறுவேறு பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தாவரங்களின் தொகுதி (குலை)	குலைப்பெயர் வகை
அவரைக் கொத்து	கொத்து
கொடிமுந்திரி (திராட்சை)	குலை
வாழை	தாறு
கேழ்வரகு	கதிர்

பழத்தோலின் பெயர் வகை

பல்வேறு பழங்களின் மேற்பகுதியைக் குறிக்க வேறுவேறு சொற்கள் உள்ளன.

பழத்தோலின் தன்மை	பழத்தோலின் பெயர் வகை
மெல்லிய பழத்தோல்	தொலி
திண்ணமான பழத்தோல்	தோல்
வன்மையான பழத்தோல்	ஓடு
முழுச் சுரையின் ஓடு	குடுக்கை
தேங்காய் நெற்றின் மேற்பகுதி	மட்டை
நெல், கம்பு முதலியவற்றின் மூடி	உமி

மணிப் பெயர் வகை

தாவரங்களில் விளையும் தானியங்கள் மணி எனப்படும். இந்த மணி என்பதற்குப் பல்வேறு பெயர்கள் உள்ளன.

தானியங்கள்	குறிக்கும் சொல்
நெல், புல் (கம்பு முதலிய தானியங்கள்)	கூலம்
அவரை, உளுந்து	பயிறு
வேர்க்கடலை, கொண்டைக்கடலை	கடலை
கத்தரி , மிளகாய்	விதை
புளி, காஞ்சிரை (நச்சு மரம்)	காழ்
வேம்பு, ஆமணக்கு	முத்து
மா, பனை	கொட்டை
தென்னை	தேங்காய்
அவரை, துவரை	முதிரை

இளம்பயிர்களின் பெயர் வகை

தாவரங்கள்	இளம் பயிர் வகை
நெல், கத்தரி	நாற்று
மா, புளி, வாழை	கன்று
தென்னை	பிள்ளை
பனை	மடலி அல்லது வடலி

பல சொல் வகைகள்

வித்து வகை, வேர் வகை, பூ வகை, காய் வகை, கனி வகை உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட தாவரங்கள் சார்ந்த பல்வேறு பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் தமிழ்ச்சொல் வளத்தின் சிறப்பைப் புலப்படுத்துவதை பாவாணர் எடுத்துரைத்துள்ளார். சொல்வளம் நிறைந்த மொழியானது, அது பயன்படுத்தப்படும் நாட்டின் வளத்தையும் நாகரிகத்தையும் உணர்த்துவதுடன், பொருளைக் கூர்ந்து நோக்கி நுண் பாகுபாடு செய்யும் மக்களின் மதிநுட்பத்தையும் உணர்த்துகிறது.

enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com

கூடுதல் தகவல்கள்

உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா ஆகும். மாநாட்டுக்குரிய அந்த முதல் மொழி தமிழ்மொழி ஆகும். **– பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்**

கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ்

போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554 இல் **கார்டிலா** என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் Cartilha de lingua Tamil e Portugues. இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

செய்தி – ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்.

செய்யுள்

காலக்கணிதம்

கண்ணதாசன்

ஆசிரியர் குறிப்பு

முத்தையா என்ற இயற்பெயரைக் கொண்ட கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். இவரது பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர். 1949ஆம் ஆண்டு **கலங்காதிரு மனமே** என்ற பாடலை எழுதி, இவர் திரைப்படப் பாடலாசிரியரானார். திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர். இவர் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர். தனது திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் **மெய்யியலை (Philosophy)** மக்களிடையே கொண்டு சேர்த்தவர். **சேரமான் காதலி** என்னும் புதினத்திற்காக **சாகித்திய அகாதெமி** விருது பெற்றவர். இவர் தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞராகவும் நியமிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

பாடப்பகுதி :

கண்ணதாசன் கவிதைகள் என்னும் தொகுப்பிலுள்ள காலக்கணிதம் என்னும் கவிதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

கவிதை

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

பாடலின் பொருளுரை : கவிஞனாகிய நான் காலத்தைக் கணிப்பவன் ஆவேன். மனதில் தோன்றும் செய்திகளை அனைவருக்கும் வெளிப்படுத்துவேன். நான், புவியில் உள்ளோர் புகழும் தெய்வம் ஆவேன். பொன்னை விட விலைமதிப்புள்ளது என்னுடைய செல்வம் ஆகும். இவற்றை சரி என்று ஏற்றுக் கொண்டால், கவிதையாய் கூறுவது என் பணியாகும். தவறு என்றால் அவற்றை எதிர்ப்பது என் பணியாகும்.

உருவாக்குதல், அதனைக் கொடுத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் இறைவனும் நானும் மட்டுமே அறிவோம். அதனை நீங்கள் அறிந்து கொள்வீர்களாக!

செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன், பற்றுதல் மிகுத்தேன்!
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;
இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!

பாடலின் பொருளுரை : பணம் படைத்த செல்வர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, அவர்களிடம் தஞ்சம் புகமாட்டேன். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் அச்சுறுத்தலுக்கும் அஞ்சமாட்டேன். உலக உயிர்களிடத்து பாசமும் பற்றும் அதிகமாக வைத்தேன். விருப்பமுடைய பொருள்கள் அனைத்தின் மீதும் பற்றுதல் வைப்பேன். என்னிடம் பொருள் இருந்தால், பிறர் பசியை ஆற்றுவேன். இல்லாவிட்டால், என்னைச் சார்ந்தவர்களை நாடி, அவர்களிடம் பொருள் பெற்று உதவி செய்வேன். மலர்களில் வண்டாக அமர்ந்து, அதில் உறிஞ்சும் தேனை ஊர் மக்களுக்குக் கொடுப்பேன். முற்காலத்தில் வாழ்ந்த கம்பன், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் கூறாமல் விட்டுச் சென்ற உண்மைகளை உலகத்தார்க்கு சொல்வதற்கு முயற்சி செய்வேன்.

புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!

பாடலின் பொருளுரை : என்னுடைய கவிதைகளையே வாக்குமூலங்களாக எடுத்துக் கொண்டு, நான் இறந்த பின்னர் என்னைப் பற்றிய தீர்ப்பை எழுதுங்கள். உயிருடன் இருக்கும் போது என்னைப் புகழ்வதாலோ அல்லது இகழ்வதாலோ நான் எந்தப் பாதிப்பும் அடைய மாட்டேன். காட்டில் வாழும் விலங்கு போல் பகுத்தறியும் திறன் இல்லாதவன் அல்லன் நான். எனவே கல்லாக மரமாக காடு மேடாக என்னால் இருக்க முடியாது.

மாற்றம் எனது மானிடத் தத்துவம்,
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்பதறிந்து ஏகுமென் சாலை!

பாடலின் பொருளுரை : நாளும் மாற்றமடைந்து கொண்டிருக்கும் உலகின் தத்துவங்களை அறிவேன். நன்மை தருவன எவையெவை, தீமை தருவன எவையெவை என்பதை அறிந்து சொல்வதே எனது வழியாகும்.

தலைவர் மாறுவர், தர்பார் மாறும்
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க, குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது,
நானே தொடக்கம், நானே முடிவு,
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

பாடலின் பொருளுரை : நாட்டை ஆட்சி செய்யும் தலைவர்கள் மாறுவார்கள். ஆட்சி அதிகாரமும் மாறும். மெய்யறிவு மட்டுமே நிலையானது. இதனை ஏற்றுக் கொள்பவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும். குறைகூறுவோர் குறை கூறட்டும். உள்ளத்தில் இருக்கும் வார்த்தை என் உடலைப் பாதிக்காது. நானே தொடக்கமும் இறுதியும் ஆவேன். நான்

enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com

கூறுவதே நாட்டின் சட்டமாகும்.

கூடுதல் தகவல்கள்

1. கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்

நதியின் பிழையன்று ; நறும்புனலின்மை ; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த !
விதியின் பிழை; நீ இதற்கென்னை வெகுண்டதென்றான்.

– கம்பர்

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் அன்றி
வேறு - யாரம்மா !

– கண்ணதாசன்

2. கண்ணதாசனின் கவியரங்கக் கவிதை

கதிர் வெடித்துப் பிழம்பு விழ
கடல் குதித்துச் சூடாற்ற
முதுமை மிகு நிலப் பிறப்பின்
முதற் பிறப்புத் தோன்றி விட
நதி வருமுன் மணல் தரு முன்
நலம் வளர்த்த தமிழணங்கே
பதி மதுரைப் பெருவெளியில்
பாண்டியர் கை பார்த்தவளே !
நின்னை யான் வணங்குவதும்
நீ என்னை வாழ்த்துவதும்
அன்னை மகற்கிடையே
அழகில்லை என்பதனால்
உன்னை வளர்த்து வரும்
ஒண் புகழ் சேர் தண் புலவர்
தன்னை வணங்குகின்றேன்
தமிழ்ப் புலவர் வாழியரோ !

– கண்ணதாசன்

விரிவானம்

புயலிலே ஒரு தோணி

ப. சிங்காரம்

ஆசிரியர் குறிப்பு

ஆசிரியர் – ப. சிங்காரம்
காலம் – 1920 – 1977
ஊர் – சிங்கம்புணரி (சிவகங்கை மாவட்டம்)

புலம்பெயர்ந்து, வேலைக்காக இந்தோனேசியா சென்ற இவர் மீண்டும் இந்தியா வந்து தினத்தந்தி நாளிதழில் பணியாற்றினார். அந்த காலகட்டத்தில் தன்னுடைய சேமிப்பான ஏழரை லட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.

பாடச் சுருக்கம் :

19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் குடியேறிய பல்வேறு இனங்களில் தமிழினமும் ஒன்று. மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா நாடுகளில் குடியேறிய தமிழர்கள் நெடுங்காலமாக அங்கு வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவரான நூலாசிரியர் இந்தோனேசியாவில் மெபின் நகரில் இருந்தபோது இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்தது.

போர் நிகழ்ந்த சமயம் அவர் கடற்பயணம் மேற்கொண்டிருந்தார். அந்தக் கடற்பயண அனுபவத்துடன், தனது கற்பனையையும் கலந்து அவர் எழுதிய புதினம் **'கடற்கூத்து'** ஆகும். இந்தப் புதினத்தின் சுருக்கப்பட்ட பகுதி 'புயலிலே ஒரு தோணி' என்ற தலைப்பில் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

கடற்பயணத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளை இப்புதினத்தில் எடுத்துரைத்துள்ளார். கடற்பயணத்தில் வருகின்ற ஒரு கதாபாத்திரம் பாண்டியன்.

கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமைப்பொழுதில் மறைந்து, வானுடன் கடல் கலந்து விட்டது போன்ற தோற்றத்தை அளித்த சூறாவளியில் சிக்கித் தவித்தனர் தோணியில் உள்ளவர்கள்.

சூறாவளி முடிந்து சூரிய வெளிச்சம் கண்ணில் பட்டது. கப்பலின் பாய்மரம் ஒடிந்து விழுந்து கிடந்தது. கப்பலில் ஓட்டைகள் விழுந்து, உள்ளே புகுந்த கடல்நீரை மாலுமிகள் இறைத்து வெளியே ஊற்றி ஓட்டையை அடைத்தனர்.

புயலில் கப்பல் ஆட்டம் கண்டபோது அதிலிருந்து தேயிலைப் பெட்டிகள், புகையிலைச் சிப்பங்கள் மற்றும் கனமான பொருள்களை எல்லாம் கடலில் தூக்கி வீசிவிட்டனர். இன்னும் இரண்டு நாட்களில் கரையைப் பார்க்கலாம் என்ற நிலையை அறிந்த பின்பே அனைவரும் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

இந்தோனேசியாவிலுள்ள பிலவான் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு சூறாவளியில் சிக்கி, உயிர்தப்பி பினாங்கு வந்து சேர்ந்தனர்.

சூறாவளியில் அவர்கள் பட்ட இன்னல்களை தனக்கே உரியபாணியில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வழக்குச் சொற்களைக் கையாண்டு ஆசிரியர் எழுதியுள்ள முறை சூறாவளியை நேரில் கண்டது போலவே அமைந்துள்ளது.

பாடப்பகுதியில் உள்ள இந்தோனேசியா தமிழ்ச் சொற்களும் பொருளும்

தொங்கான் – கப்பல்
கப்பித்தான் – தலைமை மாலுமி (கேப்டன்)
சிப்பம் – கட்டு
பவ்வம் – கடல்
பறவை மீன் – பறக்கும் மீன்
அவுலியா மீன் – கடற்பசு
பிலவான் – இந்தோனேசியாவிலுள்ள இடம்.

கூடுதல் தகவல்

வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்

– சிலப்பதிகாரம், காடுகாண் காதை : 53–55

இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ள சிறுமலை இன்றைய திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இலக்கணம்

சொல்

விளக்கம் : ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும்.

பண்புகள் :

- இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.
- மூவகை இடங்களிலும் வரும்.
- உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.
- வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.

– நன்னூல் (நூற்பா 260)

enquiry@surabooks.com Ph: 9840455556